கொண்டு நாங்கள் ஏற்பாடுகளை செய்கிறோம் என்று நான் சொல்லி அனுப்பியிருக்கிறேன். ஆகவே பணத்தைப் பொறுத்த மட்டில் தமிழக அரசு பொறுப்பு ஏற்றுக்கொள்ளும், சிகிச்சை நடப்பதற்கான எல்லாவித ஏற்பாடுகளையும் நான் போயிருந்தபோது செய்துவிட்டு வந்திருக்கிறேன். மாண்புமிகு எதிர் கட்சி தலைவர் அவர்கள் சொன்னதைப் போல சங்கடங்கள் ஏற்படுவதற்கு நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு எடுத்துள்ள முயற்சிகளைப்பற்றி நான் குறை எதுவும் சொல்லவில்லை. அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைக் குறிப்பிட்டு காட்டித்தான் நான் சொல்கிறேன். ஒதுக்கப்பட்டிருக்கிற தொகை போதாது என்றும், நான் கேள்விப்பட்ட வரையில் 50 ஆயிரம் ரூபாய் இதற்காக ஒதுக்கப்பட்டு, மத்திய அரசினுடைய ஒப்புதல் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அறிகிறேன். அங்கே இலட்சக்கணக்கில் செலவுகள் ஆகும் என்றும், மருத்துவமனையிலே இதே நிலையில் 'டிஸ்சார்ஜ்' ஆனால் கூட லட்சக்கணக்கான ரூபாய் அதற்கு செலவிடப்பட வேண்டுமென்றும்' அவர்களுடைய குடும்பத்தார் மூலமாக எனக்கு தகவல் வந்த காரணத்தால்தான் அதை நான் வைக்கிறேன். ஒரு அரசவைக் கவிஞர் என்கிறமுறையில் அந்தப் பொறுப்புகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய கடமை நமக்கு இருக்கிற காரணத்தால் எவ்வளவு செலவானாலும் அந்தப் பொறுப்பை, அங்கே ஆகிற செலவுகள் அனைத்தையும் ஏற்றுக்கொள்வதற்கு அரசு முன் வரவேண்டுமென்று இதைக் கேட்டிட்டு காட்டினேனே அல்லாமல் வேறு அல்ல.

[முற்பகல் 10.40]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, அந்த அடிப்படையிலேதான் நாங்கள் ஒதுக்கிய தொகை போதுமானது என்று நினைத்து, ஆரம்பத்திலே கேட்டிருந்தோம். ஆனால் அந்த டாக்டர் வந்து பேசிய பிறகு, ஒதுக்கிய தொகை போதாது என்று தெரிகின்ற காரணத்தால் எவ்வளவு தொகை ஆகும் என்று கடிதம் போடுங்கள் என்று சொல்லியிருக்கிறேன். அதை வைத்து, பணத்திற்கு ஏற்பாடு செய்கிறோம் என்றும் சொல்லியிருக்கிறேன்.

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. அ. ரகுமான்கான்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. ப. குழந்தைவேலு அவர்கள் மீது நான் ஒரு உரிமைப் பிரச்சனை கொடுத்திருக்கிறேன். மவுண்ட் ரோட்டிலே.... (குறுக்கீடு) ஒரு நிமிடத்தில் நான் சொல்லிவிடுகிறேன். 8.00 மணிக்கு நான் வந்துவிட்டேன். ஆனால் 8.30 மணிக்குத்தான் வாங்கினார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உரிமைப் பிரச்சனையை எடுத்துக் கொண்டால் நீங்கள் ஒரு நிமிடம் அல்ல 10 நிமிடங்கள் வேண்டுமானாலும் பேசலாம். ஆனால் நீங்கள் கொடுத்தது

8.50 மணிக்கு என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது. 8.30 மணிக்கு நான் வந்துவிட்டேன்; அறையில்தான் இருந்தேன். நீங்கள் என்னை நேரில் சந்தித்திருக்கலாம். 8.50-க்கு கொடுத்துவிட்டு, அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் எப்படி முடியும்? என்னுடைய கவனத்திற்கு வந்திருக்கிறது, பரிசீலிக்கிறேன். பரிசீலனை செய்த பின்னால் எடுத்துக்கொள்கிறேன்.

திரு. ப. பொன்னுரங்கம்: தலைவரவர்களே, தமிழ்நாடு வர்த்தகக் கழகம் 'பந்து' செய்திருப்பது பற்றி நான் ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். அது மிகவும் முக்கியமானது;

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிறைய ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. எல்லாமே முக்கியமானவை தான். தினந்தோறும் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் எடுத்துக் கொள்கிறோம். இன்றைக்கும் ஒரு முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக்கொள்ள இருக்கிறோம்.

திரு. செ. இராமலிங்கம்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். தலைவரவர்களே, அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் பட்ட வகுப்புகள் பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம். போன்ற வகுப்புகள் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்படி சுமார் 50-க்கும் மேற்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. பேரவை நடைபெறுவது 9 நாட்கள்தான். இப்போது தினசரி ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எல்லா ஒத்திவைப்புத் தீர்மானங்களுமே முக்கியமானவைதான். அவரவர் தொகுதி சம்பந்தப்பட்டது, மாவட்டம் சம்பந்தப் பட்டது எல்லாம் இருக்கும். ஒவ்வொருவருக்கும் ஒரு பிரச்சனை இருக்கும்; இல்லை என்று நான் செல்லவில்லை. இன்றைக்கு எடுத்துக்கொள்வதும் ஒரு முக்கியமான ஒத்திவைப்புத் தீர்மானம்தான்.

4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

தென்னாற்காடு மாவட்ட தொளார் கிராம அரசினக் காலனி தீயினால் பாதிக்கப் பெற்றுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் சோ. அழகர் சாமி, இரா. கருப்பையா, பொ. உத்திராபதி, மு. அம்பிகாபதி, எம். ஆறுமுகம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம். டி. மணி, கே. ஆர். சுந்தரம் ஆகியோர் "தென்னாற்காடு மாவட்டம் தொளார் கிராமத்தில் கடந்த 4-8-1981 அன்று காலை 5 மணிக்கு அரிசன காலனிக்குத் தீ வைத்துக் கொளுத்தப் பட்டுள்ளதால் 300 குடிசைகள் பாதிக்கப்பட்டுள்ளதால் அரிசனங்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்க பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது